30 மே 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

**மூவொரு இறைவன் விழா**

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**நன்மையிலும் மற்றும் சோதனை நாட்களிலும் ஒன்றித்திருப்பது**



# அவர்கள் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக...

இன்று திருஅவை மூவொரு இறைவன் என்னும் மறை உண்மையைக் கொண்டாட நம்மை அழைக்கின்றது. எக்காலத்திற்கும் இந்தக் கோட்பாடு ஒரு மறை உண்மையாகவே இருக்கும். யாரெல்லாம் அழைக்கப்பெற்றார்களோ (பழைய ஏற்பாட்டு நூலில்) அவர்களெல்லாம் கடவுளின் குடும்பத்திற்குள் ஈர்க்கப்பட்டுள்ளார்கள்; மேலும் தற்காலத்தில் திருமுழுக்கின் வழியாக இணைக்கப்படுகின்றார்கள் என்று வாசகங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றன. கடவுளின் குடும்பத்தில் ஈர்க்கப்படுவது என்பது, மூவொரு இறைவன் அரசாளும் கடவுளின்அரசில் நுழையும் உரிமை என்னும் அருளை நமக்குத் தருகிறது

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“நாம் இவ்வாறு அழைக்கும்போது, நம் உள்ளத்தோடு சேர்ந்து, தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்”

(உரோ:8:16)

**இன்றைய வாசகங்கள்:**

இணை 4: 32-34. 39-40

திருபாடல் 33: 4-6, 9, 18-20, 22

உரோ 8: 14-17

மத்தேயு 28: 16-20

கடவுளின் அரசில் நுழைவதற்கு திருமுழுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக இருப்பதால், இயேசு இந்த மாபெரும் கட்டளையை நமக்குக் கொடுத்துள்ளார். மூவொரு இறைவனின் பெயரால், போய், அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுங்கள். கடவுளின் அரசுக்கு சாட்சியாக இருப்பது நம்முடைய முதன்மையான கடமை. கடவுளின் அரசில் வீற்றிருப்பதற்கான முன்னுரிமையைப் போலவே கிறிஸ்து மீண்டும் வரும்போது அதன் முழுமையை நாம் புரிந்துகொள்ளமுடியும். அவர் கோதுமையையும், களைகளையும் தனியே பிரிப்பார். கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். களைகளையோ எரிப்பதற்கு அனுப்புவார்.(மத்தேயு 13:30)

தமதிரித்துவத்தின் மறைஉண்மை நமக்கு வேறென்ன கற்பிக்கின்றது? இது கடவுள் கொண்டுள்ள உறவைப் பற்றி நமக்குக் கற்பிக்கின்றது. தந்தைக்கும், மகனுக்கும் இடையே உள்ள முழுமையான அன்பைப் பற்றியும், இந்த அன்பின் விளைவாக தூய ஆவியின் மகத்தான அன்பைப் பற்றியும் நமக்குக் கற்பிக்கின்றது. கடவுள் அவருடைய நன்மைத்தனத்தின் விளைவாக, அவருடைய படைப்புகள் அனைத்தும் அவரில் ஒன்றிணையவும், இதனால் நாம் அனைவரும் அவருடைய அன்பை அனுபவிக்கவும் விருப்பம் கொள்கிறார்.

ஐயோ, கடவுளின் அரசை இன்னும் அனுபவிக்காதவர்கள், நமக்குள் வாசம் செய்யும் தமதிரித்துவத்தின் அற்புத வேலைப்பாட்டையும் அனுபவிக்காமல் உள்ளனர். ஆனால், ஆன்மீக மனமாற்றத்தை அனுபவித்தவர்கள் அந்த அடிப்படை மனமாற்றத்தினால், உண்மையாகவே கடவுளின் மகன்களாக, மகள்களாக மாறிவிட்டார்கள். சரியானதைச் செய்ய தூய ஆவியின் தூண்டுதல்களுக்குப் பதில் அளிப்பதன் வழியாக, அவர்கள் தங்களுடைய விருப்பத்தை, கடவுளின் இறைத்திட்டத்திற்கு ஒப்புவித்துவிட்டார்கள்.

கடவுள் இறுதியான நன்மைத்தனத்தின் கடவுள். நம்மீது அவர் அவ்வளவு எளிதில் நம்பிக்கை இழப்பதில்லை. தொடர்ந்து உலகை வடிவமைத்துக்கொண்டே இருக்கின்றார். அவரைத் தேடுவோருக்கு, கடவுளின் அரசில் அவர்களை அழைத்துக்கொள்ள தொடர்ந்து சாட்சிகளை அனுப்புகிறார். நாம் தூதுரைக்கும் சீடர்களாக அழைக்கப்பட்டுள்ளோம்; தூதுரைப்பதே நம்முடைய முதன்மையானப் பணி. நம்மோடு எப்போதும் இருப்பதாக இயேசு உறுதியளித்துள்ளார், மேலும் நமக்கு ஆதரவாளராக தூய ஆவியைச் சுட்டிக் காட்டுகின்றார்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 22/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org